தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் - கல்வி - ஆதி திராவிடர் / பழங்குடியின மாணவர் / மாணவியர்கள் அயல்நாடு சென்று உயர்கல்வி பயிலுதல் - மாணவர் பரிமாற்று திட்டங்களுக்கு பதிலாக நேரடியாக மாணவர்கள் அயல்நாடு சென்று உயர்கல்வி பயிலுதல் - புதிய விதிமுறைகள் ஏற்படுத்துதல் - ஆணைகள் - வெளியிடப்படுகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந3) துறை

அரசாணை (நிலை) எண் 70,

நாள் 8-8-2002

படிக்கப்பட்டவை

1) அரசாணை (நிலை) எண் 44, ஆதி திராவிடர் நலன், நாள் 22-3-95
2) அரசாணை (நிலை) எண் 37, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 6-5-98.
3) அரசாணை (நிலை) எண் 107, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 14-9-98.
4) அரசாணை (நிலை) எண் 112, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22-9-98.

மீண்டும் படிக்கப்பட்டது

5) இயக்குநர், ஆதி திராவிடர் நலன் கடித எண் அப1/20211/99, நாள் 22-1-2001, 12-7-2001, 1-8-2001 மற்றும் 25-9-2001.
6) இயக்குநர், ஆதி திராவிடர் நலன் கடித எண் க4/56731/96, நாள் 27-2-2001.

---

ஆணை

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சட்டப் பல்கலைக் கழகத்தில் சட்டம் படிக்கும் ஆதி திராவிடர் / பழங்குடியின மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் பொருட்டு ரூ. 10.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு "மேயர் சிவராஜ் கல்விக் கட்டளை" தொடங்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டது.

2) மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் "மேயர் சிவராஜ் கல்விக்கட்டளை" தொடங்குவதில் பல்வேறு சட்டச் சிக்கல்கள் இருந்த நிலையில் ஆணையர், ஆதி திராவிடர் நலன் அவர்களே இத்திட்டத்தினை நேரடியாக சென்னை பல்கலைக் கழக சட்டத்துறையின் உதவியுடன் நடைமுறைப் படுத்தலாமா எனவும், அதன்படி ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்



1

ஒருவர் அயல்நாடு சென்று சட்டத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பு மற்றும் சட்ட ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்ள அயல்நாட்டு பல்கலைக் கழகத்துடனான மாணவர் பரிமாற்றத் திட்டம் செயல்படுத்தவுமெனவும் அதற்காக தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் ரூ. 10.50 இலட்சம் நீண்டகால வைப்புத் திட்டத்தில் 12 விழுக்காடு வட்டி விகிதத்தில் ரூ. 7.50 இலட்சம் மற்றும் ரூ. 3.00 இலட்சம் ஆக இரண்டு முதலீடுகளாகச் செய்வதன் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து இத் திட்டத்தினை 1998-99ம் ஆண்டு முதல் செயல்படுத்தவும் ஆணையிடப் பட்டது.

3) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை பல்கலைக் கழக பட்டியல் இன / பழங்குடியினர் பற்றாளராகச் செயல்படும் துணைப் பதிவாளர், ஆதி திராவிடர் நல ஆணையர் ஆகியோரைக் கொண்ட குழு இத் திட்டம் தொடர்பாக விரிவான நடைமுறைகளை வகுத்துக் கொள்ளவும் ஆணைகள் வெளியிடப்பட்டது.

4) மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சி படிப்பு மற்றும் மருத்துவத்துறையில் ஆராய்ச்சிப் படிப்பு பயிலுபவர்கள் குறிப்பாக அறிவியல், தொழில்நுட்ப படிப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் "அயல்நாட்டு பல்கலைக் கழகங்களுடனான மாணவர் பரிமாற்றுத் திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. அதன்படி ஐந்தாண்டிற்கு ரூ. 4.50 கோடி செலவில் ஆண்டிற்கு 10 மாணவர் வீதம் ஒரு மாணவருக்கு ரூ. 3.00 இலட்சம் வீதம் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிடப்பட்டது.

5) ஆணையர், ஆதி திராவிடர் நலன் அவர்கள் தம்முடைய கருத்துருவில் ஆதி திராவிடர் / பழங்குடியினர் மாணவர்கள் மாணவர் பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் அயல்நாடு சென்று மேற்கல்வி பயில எத்தகையிலும் உதவிகரமாக இல்லாத நிலையில் இத்திட்டத்தை மாற்றி நேரடியாகவே மாணவர்கள் வெளிநாடு சென்று உயர்கல்வி பயில கல்வி உதவித்தொகை அனுமதிக்கும் பொருட்டு அரசாணை (நிலை) எண் 112, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நாள் 22-9-98க்கு திருத்தம் வெளியிடுமாறு வேண்டியிருந்தார்.

6) அதே போன்று சட்டக்கல்வியில் பட்டம் பெற்று ஆதி திராவிடர் / பழங்குடியின மாணவர் சட்டத்தில் முதுநிலை / முனைவர் ஆராய்ச்சி போன்ற படிப்பினை அயல்நாடுகளில் மேற்கொள்ள மேயர் சிவராஜ் கல்வித் திட்டத்திற்காக ரூ. 10.50 இலட்சம் வைப்பீடாக உள்ள தொகையிலிருந்து ரூ. 1,86,500/- மட்டுமே வட்டித்தொகையாக பெறப்படுகிறது. அத்தொகையினைக் கொண்டு ஒரு மாணவர் அயல்நாட்டில் படிப்பினை மேற்கொள்ள இயலாத நிலையினைத் தெரிவித்து இத்திட்டத்திற்கான வைப்புத்தொகையினை ரூ. 10.50 இலட்சத்திலிருந்து ரூ. 1.50 கோடி உயர்த்தி வழங்க வேண்டுமாறும் ஆணையர், ஆதி திராவிடர் நலன் அவர்கள் அரசை வேண்டியிருந்தார்கள்.

7) மேலே பத்தி 5 மற்றும் 6ல் உள்ள இக்கருத்துருக்களை நன்கு ஆய்வு செய்து அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.

அ) மாணவர் பரிமாற்றுத் திட்டங்களினால் ஆதி திராவிடர் / பழங்குடியின மாணவர்கள் அயல்நாடு சென்று மேற்கல்வி தொடர்வதில் சில நிர்வாக சிக்கல்கள் உள்ளதால் அரசாணை (நிலை) எண் 44, ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலன், நாள் 22-3-95ல் ஏற்படுத்தப்பட்ட சட்டபட்டதாரி மாணவர்கள் அயல்நாடு சென்று மேற்கல்வி பயில ஏற்படுத்தப்பட்ட 'மேயர் சிவராஜ் கல்வித்திட்டம்' மற்றும் அரசாணை (நிலை) எண் 112, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நாள் 22-9-98 மூலம் ஏற்படுத்தப்பட்ட பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சி படிப்பு மற்றும் மருத்துவத்துறையில் ஆராய்ச்சி படிப்பு பயிலும் பயிலும் மாணவர்கள் அயல்நாடு சென்று மேற்படிப்பு பயிலும் "அயல்நாட்டு பல்கலைக் கழகங்களுடனான மாணவர் பரிமாற்றுத் திட்டம்" ஆகிய இவ்விரண்டு திட்டங்களையும் மாற்றி அமைத்து நேரடியாகவே அயல்நாடு சென்று மேற்கல்வி தொடரலாம் என ஆணையிடுகிறது.

ஆ) மேயர் சிவராஜ் கல்வித் திட்டத்திற்காக வங்கியில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ள ரூ. 10.50 இலட்சத்தினை, வட்டியுடன் அரசு கணக்கில் திருப்பி செலுத்த வேண்டும்.

இத்தொகையை கீழ்க்கண்ட வருவாய் வரவு கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

"2225-Welfare of Schedaled Caste, Scheduled Tribe and Other Backward Classes - 01 Welfare of Scheduled Castes - 912. Deduct - Reco' eries of unspent balance - AA Deduct Recoveries of unspent balance - 77 Deduct - Recoveries - 3. Other recoveries".
(DPC 2225 01 912 AA 7737)

மேலும் அவ்வாறு வரவு வைக்கப்பட்டதற்கான விவர அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இ) புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டத்திற்கு ஆண்டிற்கு ரூ. 30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும் இத்தொகையினைக் கொண்டு இணைப்பில் உள்ள விதிமுறைகளின் அடிப்படையில் எத்தனை மாணவர்கள் வெளிநாடு சென்று, மேற்கல்வி தொடர வேண்டும் என்பதை ஆணையர், ஆதி திராவிடர் நலன் அவர்கள் அரசினை கலந்து முடிவு எடுப்பார்கள்.

ஈ) இத்திட்டத்திற்கான விரிவான விதிமுறைகள் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது.

8) இத்திட்டத்தின்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் நேரடியாக அயல்நாடு சென்று மேற்கல்வி தொடர மைய அரசின் விதி

முறைகளின்படி உச்ச வயது வரம்பு 35 கொண்டவர்களாயும், பெற்றோர் / மாணவ/ மாணவியர் மாத கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

9) அயல்நாடுகளில் நேரடியாக மேற்கல்வி தொடரும் ஆதி திராவிடர் / பழங்குடியின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையினை ஆதி திராவிடர் நல ஆணையரே நேரடியாக மாணவர்களுக்கு ஒப்பளிக்க செய்ய வேண்டும்.

10) இத்திட்டம் குறித்து விரிவான விளம்பரங்களை செய்தித்தாள் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் ஆதி திராவிடர் நல ஆணையர் அளித்திட வேண்டும். மேலும் இணையதளத்தில் உள்ள விதிமுறைகளின்படி இத்திட்டத்தைச் செயல்படுத்துதல் வேண்டும்.

11) இத்திட்டத்திற்காகும் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225-ஆதி திராவிடர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 01 ஆதி திராவிடர் நலன் - 277. கல்வி - பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட பணிகள் - II மாநிலத் திட்டம் - KH ஆதி திராவிடர் / பழங்குடியினர் வகுப்பு மாணவர்கள் உயர்கல்விக்காக வெளிநாடு செல்வதற்கான படிப்புதவித் தொகை -12. படிப்புதவித்தொகைகளும், பயிற்சி உதவித்தொகைகளும்"

த.தொ. கு.எண் 2225-01-277-KH-120[illegible]

12) மேலே பத்தி 7இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2002-2003ம் ஆண்டுக்கான திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர்கள் மேற்படி செலவினத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் 2002-2003ம் ஆண்டுக்கான திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டுக்கான கருத்துருக்களை அரசின் நிதித்துறைக்கு அனுப்பும்போது இச்செலவினத் தொகையையும் சேர்த்து அனுப்புமாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

13) இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண் 55449/சந/2002, நாள் 7-8-2002ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 360.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செல்வம்
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

3

Government of Tamilnadu
Adi Dravidar and Tribal Welfare Department
Regulations Governing the scheme of Tamilnadu
Government overseas scholarship for SC/ST candidates
with effect from 2002-2003.

*The scheme*

The scheme provides financial assistance to finally selected students for pursuing higher studies abroad in specified fields of Master level courses Ph.D. and Post-Doctoral research programmes in the field of Engineering Technology, Science.

If for any specific year successful candidates are not available to the extent prescribed for each of the above listed categories the awards for that year will become open for candidates belonging to other categories mentioned above as per merit grades attained by such candidates. Bachelor Level courses in any discipline are not covered under the Scheme. Following courses have been approved for undertaking studies under the scheme (No award can be granted to any candidate to under take studies in subjects other than those specified below :

1. Automation Robotics including Artificial Intelligence Mechatronics and Manufacturing Technology.
2. Laser Technology
3. Paper Technology
4. Naval Architecture/Offshore structures
5. Information Technology including Computer Engineering Software, Software Quality Assurance, Networking/Connectivity Engineering Communication. System under Hazardous or Post-disaster conditions Multi-media communications.
6. Low Temperature Thermal Dynamics.
7. Optometry.
8. Art Restoration Technology
9. Ceramic & Glass Technology
10. Dock and Harbour Engineering.
11. Industrial Safety.

12. Bio-Technology/Genetic Engineering.
13. Petroleum Technology.
14. Aircraft/Space Engineering.
15. Imaging System Technology.
16. Graphic Engineering.
17. Composite Materials Engineering including Decentralised Power Distribution (for solar heat) System, Energy Storage Engineering, Energy Conservation, Energy Efficient Habitat Engineering.
18. Satellite/Remote sensing
19. Packaging Engineering/Technology.
20. Nuclear Engineering.
21. Agriculture
22. Medical
23. Law

**Eligibility Condition**

*I. Minimum Qualifications*

(a) For Post Doctoral :- 1st class or 60% marks or equivalent grade in relevant Masters Degree (2nd Class with 50% for Scheduled Tribes). Ph.D. and 5 Years' Research / Teaching / Professional experience in the concerned field.

(b) For Ph.D:- 1st class or 60% marks or equivalent grade in relevant Master's Degree (2nd class with 50% for Scheduled Tribes) and 2 years' Teaching / Research / Professional experience / M.Phil degree in the concerned field.

(c) For Master's degree :- 1st class or 60% marks or equivalent grade in relevant Bachelors' degree. (2nd class with 50% marks for Scheduled Tribes) and 2 years work experience in the concerned field.

*II. Age*

Below 35 years as on First day of the month of the Advertisement of the scheme.

*III. Income Ceiling*

Total income from all sources of the employed candidate or his/her parents/guardians should not exceed Rs. 12000/- per month (excluding such allowances as are not treated as part of total income for the purpose of income-tax) as certified by the employer. A copy of latest tax-assessment be also enclosed with application.

*IV. One child in a family and one time award*

Not more than one child of the same parents/guardians will be eligible and to this effect a self-certification will be required from the candidate. The awarded can not be considered for the award for second or subsequent times as the individual can be awarded for once.

**Other mandatory conditions**

I. Candidates who are in employment must forward their applications through their employer along with a NOC by the employer to the Commissioner, Adi Dravidar Welfare so as to reach the Commissioner, Adi Dravidar Welfare on or before the last date of receipt of applications as specified in the advertisement of the Scheme.

II. The finally selected candidates are required to obtain admission and join an accredited university/institution abroad within three years from the date of communication of selection. On expiry of this specified period of time the award will automatically get cancelled and come to an end. No request for extension of time for availing the award is permissible under the scheme. The candidates are required to seek admission and join accredited universities / institutions only.

III. The selected candidate is required to execute a bond on a non-judicial stamp paper before a notary-public with two sureties who

will execute surety bonds separately for the actual amount to be spent by Government of Tamil Nadu on the candidate. Each of the surety bonds shall specify and cover for the estimated expenditure in India Rupees that would be incurred as travel expenses, tuition fees, maintenance and contingency allowances, stipends, scholarship and other miscellaneous expenses, on the awardee during the entire period of study abroad and shall become payable by the sureties jointly or/and severally in case the awardee is declared a defaulter by the Government under the provisions of the Scheme. The language of the bond as decided by the Government of Tamil Nadu will be acceptable to the candidate.

IV. The selected candidate will also be required to execute a bond with this Government and the Indian Mission abroad as per prevailing laws of the foreign country that the extension of stay abroad beyond completion of the course of duration of the scholarship under the scheme whichever is earlier will not be permissible. The candidate/ awardee shall not seek any extension of stay abroad beyond the duration for which the scholarship is awarded. The language of the bond as decided by Government of Tamil Nadu will be acceptable to candidate.

V. The candidate shall not change the course of study or research for which scholarship has been sanctioned.

VI. The candidate will have to execute another bond with this Government and the Indian Mission abroad that he / she will sign a Record Release Consent Form in the manner prescribed by Government of Tamil Nadu and it will be acceptable to the candidate.

5

VII. The selected candidates can though pursue their respective studies in an accredited university/institution in a country of their choice with which India has diplomatic relations but this will be subject to prior written approval of the Government of Tamil Nadu whose decision will be final and not challengeable. The candidates are required to make their own efforts in seeking admission accredited Universities/ institutions in programmes/fields specified in the Scheme.

VIII. Married candidates in principle, are not allowed to take their spouse and children with them or join them subsequently during the period of study. Nevertheless, under emergency conditions like serious health grounds of the awardee, the condition may be relaxed by this State Government for which specific and preferably prior permission of the Government is required.

IX. All Administrative matters like study leave, salary etc. will be directly sorted out by the candidate with his/her employer and as per rules of the serving organisation. This Government will not take any responsibility or render assistance in this regard.

X. In case of emergencies at home where the awardee is forced to return to India for sometime to attend to the adverse situation; the awardee is permitted to return to India for the specific purpose after having informed the Indian Missions and the educational institution where one is pursuing studies about it. The awardee will, however, be required to bear to and fro journey expenses for the visit and shall also not be entitled to receive maintenance allowance under the scheme, from the Indian Mission, for the period of being away from the place of his/her educational Institution abroad and the maintenance allowance shall be resumed by the Indian Mission only

from the date of his/her resuming same course at the same institution. The awardee after having dealt with the emergencies at home, is required to return to the place of his/her educational institution, as early as possible, falling which, he/she shall be liable to be declared a defaulter and the recovery proceeding will be initiated against him/her.

XI. All candidates after having availed of the award under the Scheme are required to return to India and under no circumstances they will be issued 'No obligation to Return to India' Certificate by any concered authority in Government of Tamil Nadu.

XII. The awardee on return to India has to remain in India for at least five years and is also required to serve the State Government if he / she continues to be in Government service after return to India, as one was before going abroad with award under the Scheme.

XIII. It will be for the candidate to obtain the appropriate visa for a country wherein one intends to study further under award from the scheme and Visa issuing authorities may kindly see that only such type of visa be issued which only permits the candidate to pursue specified course abroad and thereafter the candidate returns to India. Government of Tamilnadu will render no assistance to a candidate for obtaining Visa.

XIV. Selected candidates are required to furnish all such documents and enter into such agreements before their departure as shall be decided by the Government of Tamilnadu from time to time.

XV. In case the awardee has received over payment through Indian Mission abroad or any other Government agency he/she is liable to refund the same to Government of Tamilnadu and his/her employer

(if any) is authorised to recover the excess amount from his/her dues on request from Government of Tamilnadu and refund the same to Government of Tamilnadu.

XVI. The decisions of Government of Tamilnadu will be final in all such issues as may come up during course of time.

XVII. The Indian Mission abroad will obtain six monthly progress reports from the University / institution where the awardee is pursuing his / her studies for which the award was given under the scheme. The Missions will inform to the Government such serious adverse developments in case of the awardee which requires decision towards further continuation of the award or otherwise. The Mission will however keep on advising such awardees to put serious efforts in improving their achievements who are not seen to be upto the mark as reflected in their said six monthly progress reports and they may also be reminded that financial assistance under the Scheme is not extendable beyond the stipulated period under the Scheme.

XVIII. There may arise situations when an awardee pursuing Ph.D or Post Doctoral research in a university / institution where one is initially registered with, find a serious situation where his/her guide has left and there are no immediate replacements thereof or the university / institutions has discontinued the research support facilities in the area where the awardee was pursuing Ph.D./Post Doctoral research; the Indian Mission abroad in such cases are authorised to allow the awardee to change the university institutions, after the Missions are satisfied about such a need subject, however, to the condition that the credits earned by the awardee in the initial university / institution are accepted for transfer by the second university / institutions and that

the total period of award will remain unchanged even on such a tra~sfer / change, which will be permitted only once during the award.

XIX. The prospective awardee is selected by the Selection Committee constituted by this Government, for a particular subject from within the specified subjects for pursuing Masters' Programme Ph.D. or Post Doctoral and candidate is given three years time from the date of communication about his.her selection for the award. The candidate before leaving for abroad to pursue the course for which one was selected under the scheme, is required to give a declaration to this Ministry that he/she has not already acquired the qualification in the meanwhile or has not submitted the final thesis leading to active possibility of acquiring the qualification, from the Indian University. The Ministry on receiving such a declaration from the candidate will appropriately decide as to whether candidate can be awarded under the Scheme or otherwise and departure of the candidate for abroad will depend on the decision.

XX. In case the awardee is evaluated by his/her university/educational institution for awarding the degree which is of a lower rating than the one for which the awardee had pursued studies (like award of M.Phill instead ofd Ph.D) the Government may go into the circumstances of such a eventuality and decide that whether this was because of academic incompetence of the awardee or there were other adverse circumstances for the awerdee like frequent change of course supervisors, no supervisor for some period, mental trauma for the awardee if so supported by medical evidence. After this alone the Government may decide as to whether the awardee be declared

defaulter or not. The State Government in such cases will provide the return air passage to India by shortest route and economy class and in case the awardee has been declared defaulter, he/she will be liable for recoveries of entire amount with stipulated interest thereon.

XXI. When the awardee overstays abroad for more than one month after successful completion of the course and then of his/her returns to India at own cost, he/she will not be entitled to refund of return passage booked by him/her. In normal circumstances immediately after successful completion of the course, the Indian Missions abroad books the return journey, for the awardee as provided in the Scheme, and thus, the overstaying awardee without any specific purpose for more than a month after the course is over, will forfeit his/her claims of return passage at Government expense through Indian Missions abroad.

XXII. This Government, if necessary, in consultation with other Departments/Agencies, will take decision on such issues concerning awardees arising out of such situations and circumstances which are of unforseeable nature and, thus, not covered under this written scheme and the decisions of the Government will be final and binding on the awardees.

## FINANCIAL ASSISTANCE

### *I. Value of Maintenance Allowance*

The annual maintenance allowance of US Dollars 7,700/- has been prescribed for all levels of courses covered under the Scheme. The annual maintenance allowance for candidates in United Kingdom will be Pound Sterling 5,000/- for all levels of courses covered under the Scheme.

*II. Earnings from Research/Teaching Assistanceship*

The awardees are permitted to supplement their prescribed allowances by undertaking Research/Teaching Assistantship upto US Dollars 2400/- per annum and for awardees in United Kingdom, Pound Sterling 1560/- per annum and beyond these prescribed ceilings, their maintenance allowance under the scheme will be correspondingly reduced by the Indian Missions abroad.

*III. Contingency Allowance*

Contingency Allowance for books/essential apparatus/study tour/ typing and binding of thesis etc. will be US Dollars 500/- per annum and for candidates in United Kingdom, it will be Pound Sterling 325/- per annum.

*IV. Poll Tax*

Actuals will be paid, wherever applicable.

*V. Visa Fees*

Actual visa fees in Indian Rupees will be paid.

*VI. Equipment Allowance and Incidental Journey Expenses*

Equipment Allowance of Rs. 1,100/- and incidental journey expenses upto US Dollars 15/- or its equivalent in Indian Rupees are permissible.

*VII. Fees and Medical Insurance Premium*

Actuals as charged.

*VIII. Air Passage*

Air passage from India to the nearest place to the educational institution and back to India, by economy class and shortest route in arrangements with the national carrier, will be provided.

*IX. Local Travel*

Second or Coach class railway fare from the port of disembarkation to the place of study and back. In case of far flung places not connected by rail, bus fare(s) from the place of residence to the nearest railway sation, actual

rge of crossing by ferry, air fare to the nearest rail-cum-air Station and/or II Class railway fare by the shortest route to the port of embarkation and back will be permissible.

X. For attending interviews by the candidates at the place decided by the Government of Tamilnadu, the second class fare/ordinary class bus fare from the city of their place of residence to the city in which the interviews for selection have been decided by the Government of Tamilnadu will be permissible.

The mode of disbursement of above listed financial assistance will be decided by Government of Tamilnadu and Indian Missions abroad.

Duration of Award with Financial Assistance

The prescribed financial assistance is provided upto completion of the course/research or the following period, whichever is earlier :-

(a) For Post Doctoral Research - 1 ½ years (One and a half year)

(b) Ph.D. - years (four years)

(c) Master Degree - 3 years (three years)

The ex..nsion of stay beyond prescribed period for levels of courses as mentioned above, may be considered without financial Assistance of any kind except the air passage to return to India, if and only if recommendation of the competent concerned authority in the educational institution/ University as well as the Indian Mission abroad is received certifying that such an overstay for a specific period, is absolutely essential for facilitating the candidate to complete the course. The final decision in this regard will, however, rest with the Government of Tamilnadu alone.

***Jurisdiction of the Scheme***

The Jurisdiction of the Scheme is upto providing prescribed financial support to the selected candidates for pursuing higher education in the

specified subjects. The Scheme does not cover employment aspects of the awardee and also does not provide for any kind of assistance to the awardee in seeking employment anywhere, after his/her having availed of the award.

*Default under the Scheme*

In case a candidate pursuing studies abroad violates any of the terms and conditions of the bonds executed by him/her and that the educational institution / university intimates to this Government through the Indian Mission abroad about his/her adverse reports on studies and / or conduct any other university or course / programme or / and returns to India in case of emergency without intimating the Indian Mission abroad, he/she will be declared defaulter and will become liable for refund of entire amount spent on him/her alongwith the interest which will be 12% per annum w.e.f. 2002-2003 onwards and in case an awardee fails to repay the amount within six months from the date on which a demand for such refund is made, penal interest at, the rate which is 2.5% higher than the above normal rate of interest on the outstanding amount would be charged. If the awardee fails to repay such amount alongwith interest thereon in the manner decided by Government of Tamilnadu his/her sureties who have executed bonds, will be liable to pay the entire amount failing which the District Collector of the concerned district will realize the amount as arrears of land revenue.

***Selection Procedure***

The scheme will be advertised in the newspapers giving summarised information about the scheme. The candidates shall after assessing their eligibility and suitability, as per conditions of the Scheme, apply to Commissioner, Adi Dravidar Welfare, Chennai-5 (employed candidates through proper channel), in the prescribed applications form which will form a part of the advertisement. The last date of receiving applications will also

be mentioned in the advertisement. Thereafter, all applications received upto the last date of receiving applications, as notified in advertisement, will be put before the Screening Committee. The candidates short listed by the Screening Committee will be required to present themselves for personal interview before the Selection Committee. The merit list prepared, on the basis of assessment of individual candidates, by the selection committee will finally and decisively complete the selection procedure to decide the merit. In case of tie-up of two or more candidates, the one who is eldest in age (as per date of birth) will be placed above the others, as per respective dates of birth as recorded in Secondary School certificate. The Constitution of Screening and Selection Committee will be decided by Commissioner, Adi Dravidar Welfare.

***Furnishing of False Information***

If any candidate has furnished any false information/document and is established as false, he/she will be debarred from the award and if he/she has availed of it or is availing, an action will be initiated for recovery of the amount spent with 15% compound interest thereon. Such candidate will also be black listed for future and the employed candidate will also have to face departmental action for such act, for which the Government of Tamilnadu will take up the matter with the respective employers. The respective employers are, therefore, also requested to carefully go through contents of application of their employees before forwarding the same to this Government. The employers are also free to insist of candidates employed by them to execute such bonds with them, as they fit and necessary and in accordance with their rules and regulations in such cases.

***Litigations***

Any litigation on matters arising out of this Scheme in India will be subject to sole jurisdiction of the courts situated in Tamilnadu. The litigation arising abroad will be attended to by the Indian Missions abroad.

*Passage Grants*

Applications on plain paper in the prescribed format are also invited for the award of nine passage grants in a year to Scheduled Castes/ Scheduled Tribes which are open throughout the year. Only those candidates who are in receipt of a merit scholarship for Post Graduate Studies, Research of Training abroad (excluding attending seminars, workshops, conferences), from a foreign government/organisation or under any other Scheme, where the cost of passage is not provided, will be eligible to apply.

The candidates should possess a Master's or an equivalent degree in Technical, Engineering and Science disciplines. The eligibility conditions otherwise will be same as contained in the Scheme of Government of Tamilnadu, Overseas Scholarship for SC/ST etc. The candidates who have already reached abroad, will not be considered for passage grants. For selected candidates, air passage to the destination abroad and back to India, will be provided by economy class and shortest route through arrangement with the national carrier. The prospective candidates can contact Commissioner, Adi Dravidar Welfare, Chennai-5 for obtaining application form for applying for the passage grant.

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – புதிய அறிவிப்புகள் (2010–2011)– அயல்நாடு சென்று கல்வி பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானத்தை ரூ.1,44,000/–லிருந்து ரூ.3,00,000/– இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–3) துறை

அரசாணை (நிலை) எண்.85,

நாள் 14.06.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசித் திங்கள் 31ஆம் நாள்
படிக்கப்பட்டது

ஆணையர், ஆதிதிராவிடர் நலம் கடிதம் ந.க. எண்.அ1/13020/2009, நாள் 05.05.2010.

************

**ஆணை:**

அயல்நாடு சென்று கல்வி பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 29.04.2010 அன்று நடைபெற்ற 2010–2011–ம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

> "வெளிநாடுகளில் படிக்க உதவித்தொகை தேவைப்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1.44 இலட்சத்திலிருந்து ரூ.3.00 இலட்சமாக உயர்த்தப்படுகிறது".

3. மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை தொடர்ந்து, ஆதிதிராவிட நல ஆணையர், அயல்நாடு சென்று கல்வி பயில உதவித்தொகை தேவைப்படும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,44,000/–லிருந்து ரூ.3,00,000/– இலட்சமாக உயர்த்தி ஆணை வழங்குமாறு அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

4. ஆதிதிராவிட நல ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலித்தது. பரிசீலனைக்குப்பின்னர், அயல்நாடு சென்று கல்வி பயில உதவித்தொகை தேவைப்படும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானத்தினை ரூ.1,44,000/-லிருந்து ரூ.3,00,000/- இலட்சமாக உயர்த்தி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.422 /Secy/ 2010 நாள் 24.05.2010-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

விஸ்வநாத் ஷெகாவ்கர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து ஆதி(ம) ந அலுவலர்கள்,
பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.
உயர்கல்வித் துறை, சென்னை-9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
மாநில கணக்காயர் தலைவர், சென்னை-6/18/35.
நகல்
நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், செ-9.
ஆதி(ம)ந துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை-9.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், சென்னை-9
அனைத்து துறை தலைவர்கள்
இருப்புக் கோப்பு /உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ச.சீனிவாசன் 24/6/10
பிரிவு அலுவலர்.